செய்தி வெளியீடு எண்:139 நாள்: 06.04.2015

# பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு

## செய்தி வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் இணைந்து 2015 மே மாதத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் உலகப் பொது மறையாம் திருக்குறளில் புதைந்து கிடக்கும் வாழ்வியல் கருத்துக்களை வெளிக்கொணரும் வகையில் பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டினை நடத்தவுள்ளன. இரண்டு நாள்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் உலகளாவிய அறிஞர்கள், குறள் நெறி ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் பல்துறை அறிஞர்களிடமிருந்து திருவள்ளுவரும் கன்பூசியசும், திருக்குறளும் பௌத்தமும், திருக்குறளில் மேலாண்மை, திருக்குறளில் பெண்ணின் பெருமை, திருக்குறளில் கல்வி, திருக்குறளில் ஆட்சிமுறை, திருக்குறளில் அரசியல், திருக்குறளில் அறிவியல், திருக்குறளில் ஆளுமைத்திறன், திருக்குறளில் மருத்துவம், திருக்குறளில் வேளாண்மை, திருக்குறளில் உளவியல், திருக்குறளில் தத்துவம், திருக்குறளில் ஒற்றுமை, திருக்குறளில் மக்கள், திருக்குறளில் சுற்றுச்சூழல், திருக்குறளில் அறம், திருக்குறளில் புதுமையும் புரட்சியும், திருக்குறளில் சித்தர் நெறி, திருக்குறளில் நட்பு, திருக்குறளில் சுற்றம், திருக்குறளில் ஒழுக்கம், திருக்குறளில் ஈகை, திருக்குறளில் வாய்மை, திருக்குறளில் நகைச்சுவை, திருக்குறளில் காலம், திருக்குறளில் பன்முகம், இவை போன்ற பிற பொருண்மைகள் குறித்து 8 பக்க அளவில் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளை 30.04.2015க்குள் தனி அலுவலர் (பொ.), உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை, மனை எண்.320, காவியன் பிளாசா, எல்.ஐ.ஜி.குடியிருப்பு, அண்ணாநகர், மதுரை – 625 020 என்ற அஞ்சல் முகவரிக்கோ அல்லது 11 அளவிலான எழுத்துருவில் ஒருங்குகுறியில் (யுனிகோடு) தட்டச்சு செய்து utsmdu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கவேண்டும். வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே மாநாட்டில் இடம்பெறும்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**